06.11.2024

அ.வ.எண். 383-2017

வாசா.1 - செந்தில்குமார்

<u>2 முதல் 5 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்துகளும் ஆதியில் குழந்தைய கவுண்டருக்கு பாத்தியம் என்றால் ஆமாம். குழந்தைய கவுண்டருக்கு, ராமன கவுண்டர் மற்றும் நஞ்சப்ப கவுண்டர் என்ற 2 மகன்கள் உள்ளனர் என்றால் ஆமாம். ராமன கவுண்டரும், நஞ்சப்ப கவுண்டரும் 1934 ல் பாகப்பிரிவினை செய்து கொண்டனர் என்றால் ஆமாம். இந்த வழக்கில் 1934 பாகப்பிரிவினையில் ராமன்ன கவுண்டருக்கு மட்டும் பாத்தியப்பட்ட சொத்துக்களை மட்டும் சேர்த்துள்ளோமா இல்லாமல் நஞ்சப்ப கவுண்டருக்கும் ஒதுக்கப்பட்ட சொத்துக்களையும் சேர்த்துள்ளோமா என்றால் ராமன கவுண்டரின் A-SCHEDULE சொத்தை மட்டும் தான் இந்த வழக்கில் சேர்த்துள்ளோம். 1934 பாகப்பிரிவினையில் உள்ள A-SCHEDULE சொத்தை பொறுத்து தான் பரிகாரம் கேட்டு இந்த வழக்கு. ராமன கவுண்டருக்கு என் தாயார் தேவாத்தாள், கருப்பசாமி மற்றும் பழனிச்சாமி ஆகியோர் தான் வாரிசுகள் என்றால் ஆமாம்.

ராமன கவுண்டரும் அவருடைய குமாரர்கள் கருப்பசாமி மற்றும் பழனிச்சாமி 1987 ஆண்டு ஒரு பகுதி சொத்தை 14 மற்றும் 15 பிரதிவாதிகளின் தாயாரான ரங்காத்தாளுக்கு விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் ஆமாம். இந்த வழக்கு சொத்து என் தாய் வழி பாட்டனாருடையது அதனால் தான் பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாயார் ராமன கவுண்டர் இறப்பதற்கு முன்பாக 1984 ல் இறந்துவிட்டார் என்றால் இல்லை, 1985 ல் இறந்துவிட்டார். தாவா சொத்து கூட்டு குடும்ப சொத்து என்று எனது வழக்கில் ஒரு பகுதியிலும், தனிப்பட்ட சொத்து என்று ஒரு பகுதியிலும் சொல்லியுள்ளேன் எதன் அடிட்பபடையில் நான் பாகப்பிரிவினை கேட்டுள்ளேன் என்றால் அது கூட்டுக் குடும்ப சொத்து என்பதன் அடிப்படையில் பாகம் கேட்கிறேன். இந்த பிராதில்

தனிப்பட்ட சொத்து என்று குறிப்பிட்டுள்ளது தவறு என்றால் ஆமாம். எனது மாமா கருப்பசாமி எந்த வருடம் இறந்தார் என்றால் 2006 ல் இறந்தார். 2ம் பிரதிவாதி கருப்பசாமியின் மகள். 3, 4 ம் பிரதிவாதிகள் பத்மாவதியின் வாரிசுகள். 05.02.2007 ல் ரகுபதி என்பவருக்கு வழக்கு சொத்தில் ஒரு பகுதியை பழனிச்சாமி விற்பனை செய்துள்ளார் என்றால் ஆமாம். ரகுபதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை ஏனெனில் அவர் ராதாமணிக்கு சொத்தை பொது அதிகாரத்திற்கு கொடுத்ததால் அவரை சேர்க்கவில்லை. அவர் இறந்துவிட்டார் அதனால் அவர் கணவரை 9ம் பிரதிவாதி பழனிச்சாமியை இந்த வழக்கில் சேர்த்துள்ளேன்.

மேற்படி 9ம் பிரதிவாதி பழனிச்சாமி இந்த வழக்கு தாக்கல் செய்யும்போதே இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் ஆமாம். நான் வழக்கு தாக்கல் செய்யும்போதே ராதாமணி மற்றும் ரகுபதியை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் ஆமாம். எனவே இந்த வழக்கு அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு ஆளாகியுள்ளது என்றால் சரியல்ல.

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/செந்தில்குமார்

Taken down by me to open court read over to the witness and acknowledged by her to be corrected.

Sd/Renuga
District Munsif,
Sulur